**மழைநீரை சேமிப்போம் !** **பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!**

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 04.09.2019

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி மாதம் 18ஆம் நாள் **04.09.2019 புதன்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

**பொருள் 01**:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டம் ஆகியவற்றிற்கு பைப்லைன் பதிப்பதற்காக சாலைகள் தோண்டப்பட்டதில் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணி மேற்கொள்ளுவதற்கும் மற்றும் நகரின் விரிவாக்கப் பகுதியில் புதியதாக சாலைப்பணிகள் மேற்கொள்ளுவதற்கும் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட மதிப்பீடு அறிக்கை தயார் செய்யப்பட்டது.

மேற்படி தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் 2019 - 2020 - ன் கீழ் ( TURIP 2019 - 2020 ) பணி செய்வதற்கு உரிய நிர்வாக அனுமதியும், மற்றும் நிதி ஒதுக்கீடு வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு நகர்மன்றத் தீர்மான எண்.1013 நாள். 07.08.2019–ல் ஒப்புதல் பெற்றப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது ந.க.எண். 17349 / 2019 / இ3, நாள். 03.09.2019- ஆம் தேதிய கடிதத்தில் மேற்காணும் பணிக்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விபரத்திற்கு நிர்வாக அனுமதி பெறுவதற்கு மன்றத்தீர்மான இயற்றி சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

**( ரூ. கோடியில் )**

| நகராட்சியின் பெயர் | மதிப்பீடு தொகை | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு மானிய நிதி / நில அபிவிருத்திக் கட்டணம் | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|
| தேனி – அல்லிநகரம் நகராட்சி | 10.00 | 2.50 | 4.00 | 3.50 |

இந்நகராட்சியால் மேற்கொள்ளப்பட்ட புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம், பாதாளச்சாக்கடை திட்டம் மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகிய திட்டப்பணிகளுக்கு Tamilnadu Urban Infrastructure Financial Services Limited நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கடன் தொகை மட்டும் நாளது தேதி வரை ரூ.54.00 கோடி நிலுவையில் உள்ளது.

மேற்கண்ட பணிக்கான கடன் தொகைக்கு ஒவ்வொரு மாதமும் அசல் மற்றும் வட்டித் தொகை செலுத்த போதிய நிதியில்லாத சூழ்நிலை உள்ளது. எனவே மேற்கண்ட விபரப்படியான கீழ்கண்ட பணிக்கு நிதி ஒதுக்கீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறுவதற்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**( ரூ. கோடியில் )**

| நகராட்சியின் பெயர் | மதிப்பீடு தொகை | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | நில அபிவிருத்திக் கட்டணம் | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|
| தேனி – அல்லிநகரம் நகராட்சி | 7.00 | 2.50 | 4.00 | 0.50 |

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.3374/2018/இ1)**

**<u>தீர்மான எண்.1027 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 02</u>:

தேனி அல்லிநரம் நகராட்சிக்கு சொந்தமான மேற்குச் சந்தை வடக்கு பக்க கடை எண் : **11** (வரிவிதிப்பு எண் : 125/2005079) திரு.S.சோனைமுத்து என்பவர் பெயரில் உள்ளது.

மேற்கண்ட கடையில் திரு.S.சோனைமுத்து மற்றும் திரு.S.சீனிவாசன் இருவரும் கூட்டாக தொழில் செய்த நிலையில், கூட்டுத் தொழிலிருந்து திரு.S.சோனைமுத்து என்பவர் விலகிக் கொள்வதாக கூட்டு வியாபார விலகல் பத்திரம் வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் உரிய கட்டணத்தினை செலுத்தியுள்ளார். எனவே மேற்கண்ட குத்தகை இனத்தினை தமது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட கோரும் திரு.S.சீனிவாசன் என்பவரது விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :

அ) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்:92 நாள்:03-07-2007-ன்படி மேற்குச் சந்தை வடக்கு பக்க கடை எண் : **11** (வரிவிதிப்பு எண்: 125/2005079) திரு.S.சோனைமுத்து என்பவர் பெயரிலிருந்து திரு.S.சீனிவாசன் என்பவரது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 1956 / 2018 /அ3)**

**<u>தீர்மான எண்.1028 அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 03:

தேனி-அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிதழில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | பட்டியல் எண் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1. | மாலை தமிழகம், சென்னை | MT-1300/2019-20 நாள் 14-02-2019 | செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர், தேனி வெளியீட்டு ஆணை எண்.97/ ஒப்பந்தப்புள்ளி/ விளம்பரம் / 2019 நாள் 09.08.2019. | ரூ.97,193/- |
| | | | மொத்தம் | ரூ.97,193/- |

மேற்கண்ட தொகை ரூ.97,193/- (ரூபாய். தொன்னூற்று ஏழு ஆயிரத்து நூற்று தொன்னூற்று மூன்று மட்டும் ) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.61/2019/அ3)

**தீர்மான எண்.1029 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 04:

தேனி-அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிதழில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | பட்டியல் எண் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1. | தமிழக நியூஸ், கோயம்புத்தூர். | எண். 632 நாள் 10-08-2019 | செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர், தேனி வெளியீட்டு ஆணை எண்.97/ ஒப்பந்தப்புள்ளி/ விளம்பரம் / 2019 நாள் 09.08.2019. | ரூ.98,400/- |
| | | | மொத்தம் | ரூ.98,400/- |

மேற்கண்ட தொகை ரூ.98,400/- (ரூபாய். தொன்னூற்று எட்டு ஆயிரத்து நானூறு மட்டும் ) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.61/2019/அ3)

**தீர்மான எண்.1030 அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் 05</u>:

தேனி - அல்லிநரம் நகராட்சிக்கு சொந்தமான கிழக்கு சந்தை வடக்கு பக்க தரைத்தள கடை எண் : 12A (வரிவிதிப்பு எண் : 125/BD01/00030) திரு.T.பாண்டியராஜன் என்பவர் பெயரில் உள்ளது.

மேற்கண்ட கடையில் திரு.T.பாண்டியராஜன் மற்றும் திரு.M.கனகராஜன் இருவரும் கூட்டாக தொழில் செய்த நிலையில், கூட்டுத் தொழிலிருந்து திரு.T.பாண்டியராஜன் என்பவர் விலகிக் கொள்வதாக கூட்டு வியாபார விலகல் பத்திரம் வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் உரிய கட்டணத்தை செலுத்தியுள்ளார். எனவே மேற்கண்ட குத்தகை இனத்தினை தமது பெயருக்கு பெயற் மாற்றம் செய்திட கோரும் திரு.M.கனகராஜன் என்பவரது விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :

அ) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்:92 நாள்:03-07-2007-ன்படி கிழக்கு சந்தை வடக்கு பக்க தரைத்தள கடை எண் : 12A (வரிவிதிப்பு எண்: 125/BD01/00030)திரு.T.பாண்டியராஜன் என்பவர் பெயரிலிருந்து திரு.M.கனகராஜன் என்பவரது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1957/2019/அ3)

**<u>தீர்மான எண்.1031 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 06</u>:

தேனி - அல்லிநரம் நகராட்சிக்கு சொந்தமான கிழக்கு சந்தை வடக்கு பக்க தரைத்தள கடை எண் : 12 (வரிவிதிப்பு எண் : 125/BD01/00015) திரு.P.மாரியப்பன் என்பவர் பெயரில் உள்ளது.

மேற்கண்ட கடையில் திரு.P.மாரியப்பன் மற்றும் திருமதி.G.கௌரி இருவரும் கூட்டாக தொழில் செய்த நிலையில், கூட்டுத் தொழிலிருந்து திரு.P.மாரியப்பன் என்பவர் விலகிக் கொள்வதாக கூட்டு வியாபார விலகல் பத்திரம் வழங்கியுள்ளார். உரிய கட்டணத்தை செலுத்தியுள்ளார். எனவே அதன் அடிப்படையில் மேற்கண்ட குத்தகை இனத்தினை தமது பெயருக்கு பெயற் மாற்றம் செய்திட கோரும் திருமதி.G.கௌரி என்பவரது விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :

அ) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்:92 நாள்:03-07-2007-ன்படி கிழக்கு சந்தை வடக்கு பக்க தரைத்தள கடை எண் : 12 (வரிவிதிப்பு எண் : 125/BD01/00015) திரு.P.மாரியப்பன் என்பவர் பெயரிலிருந்து திருமதி.G.கௌரி என்பவரது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1958/2019/அ3)

**<u>தீர்மான எண்.1032 அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள் 07:**

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் தற்போது நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்து நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கு கீழ்கண்ட நாளிதழ் நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை வரப்பெற்று உள்ளது.

| வ.எண். | நாளிதழ் நிறுவனத்தின் பெயர் | செய்தி வெளியிட்டப்பட்ட நாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | Kal Publications (p) Ltd, தொழில்மலர் | 14.08.2019 | 8900 |
| 2 | தீக்கதிர் தமிழ் நாளிதழ் | 16.08.2019 | 10000 |

மேற்படி தொகைகளை சம்மந்தப்பட்ட நாளிதழ் நிறுவனத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.163/2018/இ1)

**தீர்மான எண்.1033 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் 08:**

பொதுநிதி நிதி 2019 - 2020 - ன் கீழ் நகாட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அலுவலகத்தில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணி மேற்கொள்ளுவதற்கு 16.07.2019–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | Best Tech Secure, Coimbatore | 283716 | 10.48 % அதிகம் |
| 2 | Securetronics, Chennai | 256600 | 0.08 % குறைவு |

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள Securetronics, Chennai ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1562/2019/இ1)

**தீர்மான எண்.1034 அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் 09</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் தற்போது நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்து கீழ்கண்ட நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கு பட்டியல் தொகை வரப்பெற்று உள்ளது.

| வ.எண். | நாளிதழ் நிறுவனத்தின் பெயர் | செய்தி வெளியிட்டப்பட்ட நாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | மாலைமலர், தொழில்மலர் | 30.08.2019 | 9870 |

மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட நாளிதழ் நிறுவனத்திற்கு இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.163 /2018 / இ1)

**<u>தீர்மான எண்.1035 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 10</u>:

பொதுநிதி நிதி 2019 - 2020 - ன் கீழ் நகாட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களின் வருகை விபரத்தினை Bio - Time Attendance முறையில் பராமரிக்கும் பணி மேற்கொள்ளுவதற்கு 16.07.2019–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | Best Tech Secure, Coimbatore | 23910 | 9.89 % அதிகம் |
| 2 | Securetronics, Chennai | 21750 | 0.04 % குறைவு |

**<u>அலுவலகக்குறிப்பு</u> :–**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள Securetronics, Chennai ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1562 /2019 / இ1)

**<u>தீர்மான எண்.1036 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 11</u>:

தேனி - அல்லிநரம் நகராட்சிக்கு சொந்தமான மேற்கு சந்தை ஸ்டால் எண் : 35 (வரிவிதிப்பு எண் : 125/2005161) திரு.V.முத்துராமலிங்கம் என்பவர் பெயரில் உள்ளது.

மேற்கண்ட கடையில் திரு.V.முத்துராமலிங்கம் மற்றும் திரு.A.முருகன் இருவரும் கூட்டாக தொழில் செய்த நிலையில், கூட்டுத் தொழிலிருந்து திரு.V.முத்துராமலிங்கம் என்பவர் விலகிக் கொள்வதாக கூட்டு வியாபார விலகல் பத்திரம் வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் மேற்கண்ட குத்தகை இனத்தினை தமது பெயருக்கு பெயற் மாற்றம் செய்திட கோரும் திரு.A.முருகன் என்பவரது விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :

அ) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்:92 நாள்:03-07-2007-ன்படி மேற்கு சந்தை ஸ்டால் எண் : 35 (வரிவிதிப்பு எண் : 125/2005161) திரு.V.முத்துராமலிங்கம் என்பவர் பெயரிலிருந்து திரு.A.முருகன் என்பவரது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2049 /2019 / அ3)

<u>**தீர்மான எண்.1037 அனுமதிக்கப்பட்டது.**</u>

## <u>பொருள் 12</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.10, வெள்ளையன் தெருவில் வசித்து வரும் 1) திரு.காமாட்சி த/பெ.மாணிக்கம் மற்றும் 2) திரு.சுரேஷ் த/பெ.காமாட்சி ஆகியோர் தாங்கள் குடியிருப்பில் நகராட்சி மூலம் குடிநீர் இணைப்பு வழங்கவில்லை என நகராட்சி மீது தேனி மாவட்ட நுகர்வோர் குறைதீர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. வழக்கு எண்.CC/10/2019 ஆகும். மேற்கண்ட வழக்கினை நகராட்சி சார்பாக இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.எஸ்.காண்டீபன் அவர்கள் ஆஜராகி இவ்வழக்கினை எதிர்கொள்கிறார். அதன்படி தனது 24.04.2019-ம் தேதிய கடிதத்தில் வழக்கறிஞர் கட்டணமாக ரூ.7500/- (ரூபாய் ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) வழங்கக்கோரியுள்ளார். எனவே, நகராட்சி சார்பாக மேற்கண்ட வழக்கறிஞர் ஆஜராகவும், அதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.7500/-ஐ வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.514/2019/இ2)

<u>**தீர்மான எண்.1038 அனுமதிக்கப்பட்டது.**</u>

## <u>பொருள் 13</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கிழக்கு சந்தை மற்றும் மேற்கு சந்தையில் அனுமதிக்கப்பட்ட இனங்களுக்கு கூடுதலாக உள்ள கடையினை ஆய்வு செய்து 64 கடைகள் கண்டறியப்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட கடைகளை நகராட்சி மேலாளர், நகரமைப்பு ஆய்வர் மற்றும் வருவாய் ஆய்வர் அவர்கள் மீண்டும் நேராய்வு செய்து கீழ்கண்ட **ஐந்து** கடைகள் அனுமதிக்கப்பட்ட அளவில் செயல்பட்டு வருவதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **இனம்** |
|---|---|
| 1 | மேற்கு சந்தை மூங்கில் கடை எண் - 1 A |
| 2 | மேற்கு சந்தை மூங்கில் கடை எண் - 6 A |
| 3 | மேற்கு சந்தை மூங்கில் கடை எண் - 6 B |
| 4 | கிழக்கு சந்தை ஸ்டால் எண் - 2 A |
| 5 | கிழக்கு சந்தை ஸ்டால் எண் - 18 A |

எனவே மேற்கண்ட இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதை ரத்து செய்திட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**:

அ) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1414/2019/அ3)

**<u>தீர்மான எண். 1039 அ. அனுமதிக்கப்பட்டது.</u>**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி